## செய்தி வெளியீடு எண்.26/2017
## நாள்:18.04.2017

# கோடை வறட்சியை சமாளிக்க பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும் என குடிநீர் வாரியம் வேண்டுகோள்:

பருவமழை பொய்த்ததன் காரணமாக ஏரிகள் வறண்டாலும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்தாலும் பொதுமக்களுக்கு குடிநீர் கிடைத்திட சென்னைக் குடிநீர் வாரியம் பல்வேறு மாற்று ஏற்பாடுகளைச் செய்து மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்து வருகிறது.

பொதுமக்களும் குடிநீரை சிக்கனமாகப் பயன்படுத்துதல் குடிநீர் ஆதாரங்களைப் பாதுகாத்தல், ஆழ்துளை கிணறுகளை முறையாகப் பயன்படுத்துதல், மழைநீர் கட்டமைப்புகளை சீரமைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு கோடையின் குடிநீர்த் தட்டுப்பாட்டினை சமாளிக்க ஒத்துழைப்பு நல்க வேண்டும் என சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி.அருண் ராய் இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னை மக்களுக்கு கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை நாளொன்றுக்கு 830 மல்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வந்ததை மறு சீரமைத்து அடுத்த பருவமழை வரும்வரை சீராக குடிநீர் வழங்கும் பொருட்டு 550 மில்லியன் லிட்டராக குறைத்து வழங்கி வருகிறோம். இந்த அளவினை மேலும் குறைத்துவிடாமல் இதே அளவிற்கு தொடர்ந்து வழங்குவதற்கும் வாரியம் பல்வேறு முயற்சிகளுடன் அதிக அக்கறையோடு செயல்பட்டு வருகிறது.

வீடுகளில் பயன்படுத்தும் குழாயோ அல்லது பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தெருக்களில் அமைந்துள்ள பொதுக்குழாயிலோ ஒரு சொட்டு நீர் தொடர்ந்து கசிந்தாலும் கூட 10 மணி நேரத்தில் 20 லிட்டர் தண்ணீர் வீணாகும் என்பதையும் உதாரணமாக ஒரு வீட்டில் 20 லிட்டர் தண்ணீர் வீணாவதை தடுப்பதன் மூலம் 10 லட்சம் வீடுகளில் தினமும் 2 கோடி லிட்டர் என்ற அளவில் குடிநீர் சேமிக்க முடியும் என்பதை பொதுமக்கள் புரிந்து கொண்டு தங்களது

பயன்பாட்டிற்குப் பின் குடிநீர் குழாய்களை சரிவர மூடி வைக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இது தவிர குளியலறையிலிருந்து வெளியேறும் நீரை சிறிய அளவில் மறுசுழற்சி செய்வதன் மூலம் கிடைக்கும் நீரை செடிகள், கார் கழுவுதல், மரங்கள் வளர்ப்பதற்கு மற்றும் கழிவறைகள் பயன்பாடுகளுக்கு பயன்படுத்துவதன் மூலம் சுத்திகரிக்கப்பட்ட நீர் வீணாவதைத் தடுக்க இயலும்.

மின் மோட்டார் மூலம் நிலத்தடி நீரைப் பயன்படுத்தும் மக்கள் காலையில் மின்மோட்டார் பயன்படுத்தினால் அதற்குப்பின் மாலையில் தான் மின்மோட்டார் மூலம் நிலத்தடி நீரை பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு முறை பயன்பாட்டிற்கும் இடையே குறைந்த பட்சம் 9 மணிநேரம் இடைவெளி இருக்க வேண்டும். அப்போது தான் நீரூற்று சீராக இருக்கும். மின்மோட்டார் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டால் மின்சாரம் வீணாவது மட்டுமல்ல நீரூட்டலிலும் பெரும் தடை ஏற்படும் என்பதை மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வானிலை ஆய்வாளர்கள் இந்த வருடம் கோடை மழை பெய்வதற்கு அதிக வாய்ப்பு உள்ளதாக தெரிவித்துள்ளதால் பொதுமக்கள் தங்களது வீடுகளில் உள்ள மழைநீர் கட்டமைப்புகளில் உள்ள குப்பை மற்றும் கசடுகளை அப்புறப்படுத்தி நல்ல முறையில் பராமரித்து தயார் நிலையில் வைத்துக் கொண்டால் மழைபெய்யும் போது நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக உயர்வதோடு மட்டுமல்லாமல் நிலத்தடி நீரின் தன்மையும் மேம்பட வழிவகை செய்யும்.

எங்கெங்கு குடிநீர் ஆதாரங்கள் இருக்கிறதோ அங்கெல்லாம் சென்று குடிநீரைப் பெற்று பாதுகாப்பான குடிநீரை பொதுமக்களுக்கு தொடர்ந்து விநியோகம் செய்வதற்கு சென்னைக் குடிநீர் வாரியம் கடுமையாக முயற்சிகளை மேற்கொண்டலும் கூட பொதுமக்களும் அத்தனைய குடிநீர் ஆதாரங்களை பாதுகாக்கும் பொறுப்பு தங்களுக்கும் உள்ளது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் என மேலாண்மை இயக்குர் அவர்கள் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்